# காலிங்கராயருக்கு தபால்தலை

## மத்திய மந்திரி சுப்புலட்சுமி ஜெகதீசன் பேச்சு

ஈரோடு, செப். 6—

"பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கால்வாய் வெட்டி ஈரோடு மாவட்டத்தையே வளப்படுத்திய காலிங்க ராயருக்கு சிறப்பு தபால் தலை வெளியிட நடவடிக்கை எடுப்பேன்" என்று மத்திய மந்திரி சுப்பு லட்சுமி ஜெகதீசன் தெரிவித்தார்.

### நூல் வெளியீட்டு விழா

கி.பி. 13—ம் நூற்றாண்டில் கொங்கு மண்டலத்தை ஆண்டு கொண்டிருந்த வீரபாண்டிய மன்னனிடம் தளபதியாக இருந்து பின்னர் அமைச்சராக இருந்தவர் காலிங்கராயன். அவர் மக்களின் நல்வாழ்விற்காகவும், வறண்டு கிடந்த மண்ணை சோலையாக்கவும் வேண்டி பவானியில் இருந்து நொய்யல் ஆறு வரை வாய்க்கால் வெட்டி மக்களுக்காக அர்ப்பணித்தார்.

அந்த வாய்க்கால் இன்றும் "காளிங்கராயன் வாய்க்கால்" என்று நூற்றாண்டுகள் கடந்தும் ஈரோடு மண்ணை வளப் படுத்திக் கொண்டிருக்கிறது.

அத்தகைய மாமனிதரான காலிங்கராயரின் கதையை ஒரு சரித்திரக் கதையாக எழுத்தாளர் பாஸ்கரதாசன் எழுதியுள்ளார். அந்த நூலின் வெளியீட்டுவிழா நேற்று ஈரோடு கொங்கு கலையரங்கில் நடந்தது.

போல் ஆர்வம், ஆற்றல், நுண்ணறிவு, கடின உழைப்பு கொண்ட மக்கள் எங்குமே இல்லை என்று சொல்வேன்.

காளிங்கராயன் வாய்க்காலில் பயன் பெறுபவர்கள் வீட்டுக்கு ஒருவர் வீதம் கூட இங்கு வரவில்லையே என்று கூறினார்கள். ஆனால் இந்த மக்களை நன்கு அறிந்த நான் சொல்கிறேன், இந்த மக்களுக்கு தெரிந்ததெல்லாம் கடின உழைப்பு ஒன்று தான்.

இப்போது காளிங்கராயன் வாய்க்கால் திறக்கப்பட்டு விவசாய பணிகள் செய்யும் அவர்களுக்கு வேறெதைப்பற்றியும் சிந்தனை இல்லை. அவர்கள் ஒவ்வொருவருக்காகவும், அவர்களின் பிரதிநிதியாக நான் வந்துள்ளேன்.

### தபால் தலை

தீரன்சின்னமலையின் அடுத்த ஆண்டு விழாவிற்கு அவருடைய நினைவு தபால் தலை வெளியிட வேண்டும் என்று மத்திய மந்திரி தயாநிதி மாறன் அவர்களிடம் கோரிக்கை வைத்துள்ளேன்.

அது போல காலிங்கராயன், டாக்டர் சுப்பராயன் ஆகியோரின் நினைவு தபால்தலைகளையும் வெளியிட முயற்சி செய்வேன்.

இவ்வாறு மத்திய மந்திரி சுப்புலட்சுமி ஜெகதீசன் பேசினார்.

### நடிகர் சிவக்குமார்

விழாவில் நடிகர் சிவக்குமார் பேசியதாவது:—

கொங்கு மண்டலத்தின் வரலாறு மறைக்கப்பட்டுள்ளது. நமது பாரம்பரியம், கலாசாரம் ஆகியவை கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துவருகிறது. அவ்வாறு அவை அனைத்தும் அழியாமல் நாம் ஒன்று சேர்ந்து காக்க வேண்டும். நமது மண்ணின் கதாநாயகர்களான தீரன்சின்னமலை, கே.பி. சுந்தராம்பாள், காலிங்கராயன் ஆகியோரின் வரலாறுகளை நன்கு படித்து தெரிந்து கொள்ள வேண்டும். அது போல கொங்கு மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

இவ்வாறு நடிகர் சிவக்குமார் பேசினார்.

### நடிகர் சத்யராஜ்

நடிகர் சத்யராஜ் கூறியதாவது:—

நான் காலிங்கராயனின் வம்

(5-ம் பத்தி பார்க்க)



'காலிங்கராயன் கதை' நூலை மத்திய மந்திரி சுப்புலட்சுமி ஜெகதீசன் வெளியிட்டார். அருகில் எஸ்.கே.எம். மயிலானந்தன், நடிகர்கள் சிவக்குமார், சத்யராஜ் மற்றும் பலர் உள்ளனர்.

### மத்திய மந்திரி

விழாவிற்கு எஸ்.கே.எம் நிறுவனங்களின் தலைவர் எஸ்.கே. எம். மயிலானந்தன் தலைமை தாங்கினார். டாக்டர் எஸ். தனபாக்கியம் கந்தசாமி குத்து விளக்கேற்றினார். திரைப்பட நடிகர்கள் சிவக்குமார், சத்தியராஜ் ஆகியோர் அறிமுக உரையாற்றினார்கள்.

மத்திய சமூகநலம் மற்றும் நீதித்துறை இணை மந்திரி சுப்பு. லட்சுமி ஜெகதீசன் விழாவில் கலந்து கொண்டு நூலை வெளியிட்டார். மேலும் காலிங்கராயன் படத்தைப் திறந்து வைத்து பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:—

### மனநிறைவு

காளிங்கராயன் வாய்க்கால் பற்றி என்னுடைய பள்ளி, கல்லூரி காலங்களில் வாய்மொழி செய்திகள் மூலம் ஓரளவு தெரிந்து கொண்டேன். ஆனால் புலவர் ராசு எழுதிய காலிங்கராயன் ஆய்வு நூலை படித்த பிறகுதான் காலிங்கராயன் தமது மக்களுக்காக பட்ட துன்பங்கள், அவமானங்கள் அனைத்தையும் கடந்து அவர் செய்த தியாகம் பற்றி படித்த பிறகு என் உள்மனதில் இப்படிப் பட்ட மனிதர்களை இனி சந்திப்போமா? என்ற ஏக்கம் இருந்தது.

இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் அவரது குடும்பத்தினரை பார்க்க வேண்டும் என்ற ஆசை என்னுள் இருந்தது. இந்த புத்தக வெளியீட்டு விழாவில் அது நிறைவேறி உள்ளது. காலிங்கராயரின் வம்சாவழியினரை காணமுடிந்த மனநிறைவோடு இங்கு நிற்கின்றேன்.

### உழைப்பு

நமது கொங்கு மக்களைப்

### 8-ம் பத்தி தொடர்ச்சி

சத்தை சேர்ந்தவன் என்று என் சிறு வயதிலேயே சொல்வார்கள். அதனால் நான் அவருடைய வம்சாவழி என்பது மட்டுமே எனக்கு தெரிந்திருந்தது. ஆனால் காலிங்கராயன் கதையை படித்த பிறகுதான் என்னுள் உண்மையான பெருமை வந்துள்ளது.

12 ஆண்டுகளாக ஒரு கால்வாயை வெட்டி அதில் தண்ணீர் கொண்டு வந்து பின்னர் அந்த தண்ணீரை தனது வாரிசுகளே பயன்படுத்தாது என்று அவர் செய்த தியாகம், பிரதமர் பதவியை துறந்த சோனியாகாந்தியின் தியாகத்துக்கு நிகரானது.

### காலிங்கராயன் சிலை

இங்கு காலிங்கராயன் சிலை வைக்க வேண்டும் என்று பேசினார்கள். அப்படி காலிங்கராயனுக்கு எங்கு சிலை வைத்தாலும் அதற்கான மொத்த செலவையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

இவ்வாறு நடிகர் சத்யராஜ் பேசினார்.

### கவுரவிப்பு

விழாவில் காலிங்கராயனின் வம்சா வழியினரான கிருஷ்ணராஜ் காலிங்கராயர், கதிர்வேல் காலிங்கராயர், அருண்குமார் காலிங்கராயர், இந்திராணி காலிங்கராயர், சத்தியராஜின் தாயார் ஆகியோர் கவுரவிக்கப்பட்டனர்.

ஆர். செங்கோட்டுவேலன் சிலம்பொலி செல்லப்பன் புலவர் செ. ராசு, கே. செல்லமுத்து, யூ.ஆர்.சி. நிறுவனங்களின் தலைவர் யூ.ஆர். சின்னசாமி, சக்தி மசாலா தலைவர் பி.சி.துரைசாமி, வேளாளர் கல்வி நிறுவன தலைவர் எஸ்.டி. சந்திரசேகர், கொங்கு கலையரங்க தலைவர் ஆர். வேலுச்சாமி ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர்